(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 64.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2010, திசெம்பர் 10, வெள்ளிக்கிழமை, மு. ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0237/ '10

1.

கௌரவ சஜித் பிரேமதாஸ,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அம்பாந்தோட்டை மாவட்டத்தில் தங்காலை வலயக் கல்விக் காரியலயத்திற் குட்பட்ட தங்காலை கோட்டக் கல்விக் காரியாலயத்தினால் பரிபாலிக்கப்படும் அரசாங்கப் பாடசாலைளின் எண்ணிக்கை என்னவென்பதையும்,

(ii) அப்பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

(iii) மேற்படி பாடசாலைகளில் தற்போது மூடப்பட்டுள்ள அல்லது மூடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(iv) அப்பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இக்கோட்டத்திற்குரிய பாடசாலைகளில் மிகையான ஆசிரியர்கள் உள்ளனரா என்பதையும்,

(ii) அவ்வாறான பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

(iii) ஆசிரியர்கள் பற்றாக்குறை நிலவும் பாடசாலைகளின் பெயர்கள் யாவை என்பதையும்,

(iv) பற்றாக்குறை நிலவுவது எந்தப் பாடங்களுக்கு என்பதையும்,

(v) இவ்வாறு ஆசிரியர் பற்றாக்குறை நிலவும் பாடசாலைகளுக்கு ஆசிரியர்களைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(vi) அவ்வாறாயின் அது எவ்வளவு காலத்தினுள் நடைபெறுமென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0560/ '10

2.

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனத்தின் சில்லறை களஞ்சியங்கள் 24 மணி நேரமும் திறந்து வைக்கப்பட்டிருந்த காலக்கட்டத்தில் மேற்படி நிறுவனத்திற்குப் பொறுப்பாக செயலாற்றிய அமைச்சர் யாரென்பதையும்,

(ii) மேற்படி அமைச்சரின் பிரத்தியேக பணியாட்டொகுதிக்கான சனாதிபதி செயலாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட உத்தியோகத்தர் களின் எண்ணிக்கை மற்றும் பதவிப் பெயர்கள் யாவையென்பதையும்,

(iii) மேற்படி பதவிகளை வகித்த உத்தியோகத்தர்களின் பெயர்கள் முகவரிகள், பெற்றுக்கொண்ட சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் வெவ்வேறாக யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி அமைச்சர் பதவி வகித்த காலகட்டத்தில் இவரது பணியாட்டொகுதிக்கு மேற்படி அமைச்சிலிருந்து, அரசாங்க கூட்டுத்தபனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகளிலிருந்து, கூ. மொ. வி. நி. போன்ற இணைந்த கம்பனிகளிலிருந்து இணைக்கப்பட்டிருந்த உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) இவர்களது பெயர்கள், முகவரிகள், வகித்த பதவிகள், சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள், பெற்ற ஏனைய சலுகைகள் வெவ்வேறாக யாவையென்பதையும்,

(iii) மேற்படி உத்தியோகத்தர்கள் அமைச்சின் பணியாட்டொகுதிக்கு இணைக்கப் படுவதற்கு முன்னர் சேவையாற்றிய நிறுவனங்கள் மற்றும் வகித்த பதவிகள் வெவ்வேறாக யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0582/ '10

3.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நாட்டில் இயங்கிக்கொண்டிருக்கும் எல்லா புரோட்பான்ட் (அகலப்பட்டை) வழங்குனர்களின் பெயர்களையும்,

(ii) அக்கம்பனிகளின் உடமையாளர்கள் மற்றும் பணிப்பாளர்களின் பெயர்களையும்,

(iii) புரோட்பான்ட் வழங்குனர்களுக்கு வழங்கப்பட்டுள்ள மீடிறன்களையும் (அதிர்வெண்களையும்)

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) புரோட்பான்ட் வழங்கும் அலுவலகங்களில் பணிபுரியும் நபர்களின் எண்ணிக்கையையும்,

(ii) புரோட்பான்ட் வழங்குனர்கள் எப்போது தமது நடவடிக்கைகளை ஆரம்பித்தனர் என்பதையும்,

(iii) கடந்த ஐந்து வருடங்களில் புரோட்பான்ட் வழங்குனர்களினால் செலுத்தப்பட்ட வரிகளின் தொகையையும் வருடவாரியாகவும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0609/ '10

4.

கௌரவ மொஹான் பிரியதர்ஷன த சில்வா,— சுதேச மருத்துவத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் சுதேச மருத்துவத் தேவை கருதி இந்நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ள மூலிகைச் செடி வகைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) குறித்த மூலிகைச் செடிகளின் இறக்குமதிக்காக மேற்படி வருடங்களில் ஏற்றுள்ள மொத்தச் செலவினம் எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அந்த மூலிகைச் செடிகளை இந்நாட்டில் பயிரிடுவதற்காக நடைமுறைப் படுத்தப்பட்டுள்ள வேலைத் திட்டமொன்று உள்ளதாவென்பதையும்,

(ii) அவ்வாறாயின், சம்பந்தப்பட்ட கருத்திட்டத்திற்காக இதுவரை செலவிடப் பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0697/ '10

5.

கௌரவ புத்திக பத்திரண,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) விவசாயிகளின் வாழ்க்கை நிலைமையை பாதுகாப்பதற்காக நடைமுறைப் படுத்தப்பட்டுள்ள விவசாய ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக அவர் அறிவாரா?

(ஆ) (i) தற்போது விவசாய ஓய்வூதியம் பெறுகின்றவர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்,

(ii) விவசாயிகளை விவசாய ஓய்வூதியத்திட்டத்தில் இணைத்துக்கொள்கின்ற செயன்முறை யாதென்பதையும்,

(iii) விவசாய ஓய்வூதியமாக மாதமொன்றுக்கு ஒருவருக்கு வழங்கப்படும் பணத்தொகை எவ்வளவென்பதையும்,

அவர் குறிப்பிடுவாரா?

(இ) தற்போது கிடைக்கின்ற விவசாய ஓய்வூதியமானது நிலவுகின்ற வாழ்க்கைச் செலவு நிலைமையின்படி போதுமானதல்லவென அவர் ஏற்றுக்கொள்கின்றாரா?

(ஈ) (i) இப்போது வழங்கப்படுகின்ற விவசாய ஓய்வூதியத்தை தற்போதை வாழ்க்கைச் செலவின் நிலைமைக்கேற்ப அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(ii) ஆமெனில், அதிகரிக்கப்படும் விவசாய ஓய்வூதியத் தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0238/ '10

6.

கௌரவ சஜித் பிரேமதாஸ, — கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) அம்பாந்தோட்டை மாவட்டத்தில் அம்பாந்தோட்டை வலயக் கல்விக் காரியாலயத்திற்குரிய அம்பலாந்தோட்டை கோட்டக் கல்விக் காரியாலயத்தினால் நிருவகிக்கப்படும் அரசாங்கப் பாடசாலைகளில் உட்கட்டமைப்பு வசதிகளுக்கும், பொதுவான தேவைகளுக்கும் பற்றாக்குறை நிலவுகிறதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இப்பாடசாலை முறைமையில் மின்சார வசதியற்ற பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) அப் பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

(iii) மேற்படி பாடசாலை முறைமையில் மின்சார வசதியற்ற ஆசிரியர் விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(iv) அவற்றிற்குரிய பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

(v) மரத்தளபாடங்களுக்கான தேவை காணப்படும் பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(vi) அத்தேவைகள் யாவையென்பதையும்,

(vii) விஞ்ஞான கூடங்கள் மற்றும் நூலகங்கள் அற்ற பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(viii) அப் பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்படி தேவைகளைப் பூர்த்திசெய்யத் தேவையான நிதியை அப்பாடசாலை களுக்கு ஒதுக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(ii) அவ்வாறாயின், அது எவ்வளவு காலத்தினுள் நடைபெறுமென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0583/ '10

7.

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2009 ஆம் ஆண்டு மற்றும் 2010 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கை அராசங்கத்தினால் உலகெங்கும் நியமிக்கப்பட்ட கௌரவ தூதுவர்களின் எண்ணிக்கையையும்,

(ii) அந்நியமனங்கள் வழங்கப்பட்ட நாடுகளின் பெயர்களையும் அந்நியமனங் களுக்கான காரணங்களையும்,

(iii) அந்நியமனங்களால் இலங்கைக்கு கிடைக்கும் ஏதாவது விசேட அனுகூலத்தையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) எவரேனும் புதிய நபர்கள் கௌரவ தூதுவர்களாக நியமிக்கப்படவுள்ளனரா என்பதையும்,

(ii) வழங்கப்படும் புதிய நியமனங்கள் தொடர்பாக ஏதாவது அடிப்படைகள் உள்ளனாவா என்பதையும்,

(iii) கடந்த பத்து வருடங்களில் கௌரவ தூதுவர் எவரேனும், பதவிலிருந்து நீக்கப்பட்டனரா என்பதையும்,

(iv) ஆமெனில், அவர்கள் பெயர்கள் மற்றும் நீக்கப்பட்டமைக்கான காரணங்களையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள் (இல.1),— ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 3ஆம் இலக்க பிரேரணை மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில் 23 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளிலிருந்து விலக்குப்பெறுமாக.

2.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள் (இல.2),— 2010, நவெம்பர் 27ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினால் தடைபெறாமல், ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 1 தொடக்கம் 3 வரையான இலக்கப் பிரேரணைகள் மீதான நடவடிக்கைகள் இன்றைய தின அமர்வில் 7, 70(2) மற்றும் 70(3) ஆம் இலக்க நிலையியற் கட்டளைகளின் ஏற்பாடுகளிலிருந்து விலக்குப்பெறுமாக.

3.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— இப்பாராளுமன்றம் இன்று அதன் அமர்வு கலையும் போது 2011, சனவரி மாதம் 04ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை பி.ப. 1.00 மணி வரை ஒத்திவைக்கப்படுமாக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*அ1.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2011) — (ஒதுக்கப்பட்ட பதினாறாம் நாள்) — குழு ஆய்நிலை (பரிசீலனை, திசெம்பர் 09)

* 2.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம்,— 2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவினால், நிதி, திட்டமிடல் அமைச்சருக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், பதில் நிதி, திட்டமிடல் அமைச்சரால் செய்யப்பட்ட கட்டளை இல.27 இல் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

### 2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 27

2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் பதில் நிதி, திட்டமிடல் அமைச்சர் சரத் அமுனுகம ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக்கட்டளை மூலம் அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 21302 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "அச்சிடல், பிரசாரம் மற்றும் புத்தகங்கள் விற்பனை முற்பணக் கணக்கு - கல்வி வெளியீட்டுத் திணைக்களம்" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்:-

(i) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — *மீளாய்வு செய்யப்படவில்லை.*

(ii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லை — ரூபா 2,400,000,000 இலிருந்து ரூபா 2,162,000,000 வரை.

(iii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை — *மீளாய்வு செய்யப்படவில்லை.*

(iv) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை — ரூபா 100,000,000 இலிருந்து ரூபா 960,000,000 வரை.

(இக்கட்டளை 2009.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம் : கலாநிதி சரத் அமுனுகம*
பதில் நிதி, திட்டமிடல் அமைச்சர்.

கொழும்பு 01,
2010.07.03

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 3.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— இறக்குமதிகள், ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியுடனும் 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதிகள், ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவுடனும் மற்றும் 14 ஆம் பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படும் 20 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியால் ஆக்கப்பட்டு 2010 நவெம்பர் மாதம் 22 ஆந் திகதிய 1681/6 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2010.12.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 4.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள், — 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 5.

வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 6.

காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 7.

உள்ளூர் அதிகாரசபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 8.

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 9.

தீங்கு விளைவிக்கும் ஆயுதங்கள் (திருத்தம்) சட்ட மூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 10.

மத்தியஸ்த்த சபைகள் (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

11.

பின ஒழுங்கமைப்பு (கூட்டிணைத்தல்) சட்ட மூலம் — இரண்டாம் மதிப்பீடு.

12.

இலங்கை செமட்ட செத மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

13.

மகேஸ்வரி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

## தினப்பணிகள் மீதான திருத்தங்கள் பற்றிய முன்னறிவித்தல்

அ1.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2011) என்னும் சட்டமூலத்திற்குக் குழு ஆய்நிலையில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் திருத்தங்களளைத் “தினப்பணிக்கான அனுபந்தம்” என்னும் தனியிதழிற் காண்க.